**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2024–ஆம் வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண்.845/2023**

**உள்**

**அசல் வழக்கு எண்.751/2022**

**(CNR No. TNDG19-003089-2022)**

**----**

கலியுகவரதன் (எ) வரதராஜ்

..... மனுதாரர்/3 ஆம் பிரதிவாதி

/எதிர்/

1. இளவர்.அதிசயா

2. இளவர். அபூர்வா

(மேற்படி இளவர் வாதிகள் தங்கள் பாட்டியும்,

அடுத்த சிநேகதியுமான லேட்.துரைச்சாமி மனைவி ஈஸ்வரி அவர்கள் மூலம்)

...... 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

3. P. முத்துலட்சுமி

4. P. அருண்குமார் ..... 3, 4 எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள்

இந்த மனுவானது கடந்த 14.12.2023 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.751/2022–இல் இ.ம.எண்.845/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் கடந்த **09.01.2024–ஆம்** தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/3 ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.அனிருத் R.கர்கா அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சிவசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** இந்த மனுவானது வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து, அவர் மனுச்சொத்தை அது இருக்கும் இடமான கொ.கீரனூர் கிராமத்திற்கு சம்பந்தப்பட்ட அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மனுச்சொத்தில் உள்ள கட்டிடங்களுக்கு வரி வசூலிக்கும் கொ.கீரனூர் பஞ்சாயத்து அலுவலர் மற்றும் போட்டோகிராபர் ஆகியோர் துணையுடன் மனுச்சொத்தை பார்வையிட்டு Locate செய்து மனுச்சொத்தில் இரு தனிப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் கட்டிடங்கள் இருப்பது பற்றியும், அவற்றின் அளவுகள் பற்றியும், அவை தனித்தனியாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது பற்றியும், அவற்றின் மின்இணைப்புகள் என்ன என்பது பற்றியும், அதில் மேல்புறம் உள்ள வடக்குப் பார்த்த கட்டிடம் குடியிருப்பு வீடாகப் பயன்படுத்தப்பட்டு வருவது பற்றியும், அதில் உள்ள சமையல் Gas Stove மற்றும் பொருட்கள் பற்றியும், அதற்கு கீழ்புறம் உள்ள கட்டிடத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிரந்தரமாக பொருத்தப்பட்டு தற்போதும் இருந்து வருவது பற்றியும், அதற்கான மின்இணைப்பு எண்.387 துண்டிக்கப்பட்டிருப்பது பற்றியும், ஆணையர் போட்டோ மற்றும் வரைபடத்துடன் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–**

மனுதாரர், அசல்வழக்கில் 3 ஆம் பிரதிவாதி என்றும், இளவர். வாதிகள், மனுதாரரின் மக்கள் என்றும், அசல்வழக்கை மனுதாரரின் தாயாரும், இளவர். வாதிகளின் அடுத்த சிநேகிதியுமான ஈஸ்வரி மூலம் அவர்களுக்கு மனுச்சொத்துக்களில் உள்ள 2/3 பங்கை பாகப்பிரிவினை செய்து கொடுக்கவும், மனு 1 முதல் 5 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து மனுதாரரால் 3–ம் எதிர்மனுதார் / 1–ம் பிரதிவாதிக்கு 14.03.2014–ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமும், 4–ம் எதிர்மனுதார், 2–ம் பிரதிவாதிக்கு 6 முதல் 12 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து 30.04.2014–ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமும் இல்லாநிலையது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்குத்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 4–ம் எதிர்மனுதார் / 2–ம் பிரதிவாதி, மனுதாரரிடமிருந்து 30.04.2014–ம் தேதி பெற்ற கிரய ஆவணச் சொத்து விபரத்தில் 2–லக்கச் சொத்தான சர்வே எண். 130/2A5–ல் கிழமேல் இருபுறமும் 31 அடி, தென்வடல் இருபுறமும் 32 அடி ஆக 992 சதுரடி அளவில் வடக்குப் பார்த்து கட்டப்பட்டுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த ஒரு விவசாய உபயோக சாளையையும் அதில் மின் இணைப்பு எண். 363–ம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றும், அதற்கு கீழ்புறம் அதே சர்வே எண்ணில் மனுதாரரால் 2013 ஆம் ஆண்டு கிழமேல் 67, தென்வடல் 30 அளவில் நிர்மானிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலைய ஆஸ்பெஸ்டாஸ் கூரை கட்டிடத்தையும், அதில் அமைக்கப்பட்டுள்ள ரூ.50,00,000/– மதிப்பிலான இயந்திரங்களையும், அந்த இயந்திரங்களை இயக்குவதற்காக தன்னால் பெறப்பட்ட மின் இணைப்பு எண்.387–யும், அவருடைய கிரைய ஆவணச் சொத்து விபுரத்திலோ, 3–ம் எதிர்மனுதார் கிரைய ஆவண சொத்து விபரத்திலோ குறிப்பிடவில்லை, மேலும் 4–ம் எதிர்மனுதார் /2–ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தில் 2–லக்கச் சொத்தாக விவசாய உபயோக சாளை என்று குறிப்பிட்டிருப்பது உண்மையில் தங்கள் குடியிருப்பு வீடாகும் என்றும், மேற்படி வீட்டில் தனது தாயாரும், தானும், தனது குடும்பத்தாரும் நாளது வரை குடியிருந்து வருகிறோம் என்றும், மேற்படி மின் இணைப்பு எண். 363 தனது சகோதரி கணவரான R. ராஜா என்பவர் பெயரில் உள்ளது என்றும், கடந்த 2014–ம் ஆண்டு தான் 6 முதல் 12 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து 4–ம் எதிர்மனுதாருக்கு 30.04.2014–ம் தேதி கிரையம் செய்தது முதல் தற்போது வரை மின் இணைப்பு எண். 363–க்கான மின் கட்டணத்தை தானே செலுத்தி வருவதாகவும், மின் கட்டணம் எதையும் 4–ம் எதிர்மனுதார் / 2–ம் பிரதிவாதி ஒரு போதும் செலுத்தியது கிடையாது என்றும், குடியிருப்பு கட்டிடத்திற்கு கீழ்புறம் உள்ள வடக்குப் பார்த்த ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த குடிநீர் சுத்திகரிப்பு ஆலையும், அதில் நிர்மானிக்கப்பட்ட இயந்திரங்களும் தற்போது வரை உள்ளன என்றும், பழனி சார் ஆட்சியரின் 22.05.2018–ம் தேதிய உத்திரவின்படி கொ.கீரனூர் உதவி மின் பொறியாளர் அவருடைய கடித தேதி 05.06.2018–ன்படி குடிநீர் சுத்திகரிப்பு ஆலைக்கு வழங்கப்பட்டிருந்த மின் இணைப்பு எண்.387 துண்டிக்கப்படும் வரை அதற்கு நானே மின் கட்டணம் செலுத்தி வந்தேன்

என்றும், குடியிருப்பு வீட்டிற்கான கதவு எண். 3/153 ஆகும் என்றும், அதற்கான வரி விதிப்பு எண். 1069 ஆகும் என்றும், குடிநீர் சுத்திகரிப்பு ஆலை கட்டிடத்தின் கதவு எண். 3/153 ஆகும் என்றும், அதற்கான வரி விதிப்பு எண். 98 ஆகும் என்றும், மேற்படி இரு கட்டிடங்களுக்கான வீட்டுவரியை தான் செலுத்தி வருவதோடு மின் இணைப்பு எண். 387 துண்டிக்கப்படும் வரை அதற்கான தொழில் வரியும் தானே செலுத்தி வந்ததாகவும், 4-ம் எதிர்மனுதார் / 2-ம் பிரதிவாதி, பி.வா.சா. 1 ஆக 17.11.2023-ம் தேதி வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது அவர் கிரைய ஆவணத்திலோ, அவர் தாயார் கிரைய ஆவணத்திலோ சர்வே எண். 130/2A5-ல் எவ்வித குடிநீர் சுத்திகரிப்பு ஆலை கட்டிடமோ, அதில் எவ்வித இயந்திரங்கள் பொறுத்தப்படவும் இல்லை என்றும், குடிநீர் சுத்திகரிப்பு ஆலை கட்டிடத்திலிருந்த இயந்திரங்கள் கிரையம் செய்யப்படும் காலத்தில் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் பொய் உரைத்ததால், வாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணையில் மேற்படி சுத்திகரிப்பு ஆலை கட்டிடமும், அதில் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு தற்போதும் இருந்து வருவதை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அதுதொடர்பாக அவர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்வதில் பி.வா.சா. 1 -க்கு ஆட்சேபணை உள்ளதா என்று கேட்ட கேள்விக்குத் தனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று உறுதிபடக் கூறியுள்ளார் என்றும், எனவே வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து, அவர் மனுச்சொத்தை அது இருக்கும் இடமான கொ.கீரனூர் கிராமத்திற்கு சம்பந்தப்பட்ட அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மனுச்சொத்தில் உள்ள கட்டிடங்களுக்கு வரி வசூலிக்கும் கொ.கீரனூர் பஞ்சாயத்து அலுவலர் மற்றும் போட்டோகிராபர் ஆகியோர் துணையுடன் மனுச்சொத்தை பார்வையிட்டு Locate செய்து மனுச்சொத்தில் இரு தனிப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் கட்டிடங்கள் இருப்பது பற்றியும், அவற்றின் அளவுகள் பற்றியும், அவை தனித்தனியாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது பற்றியும், அவற்றின் மின்இணைப்புகள் என்ன என்பது பற்றியும், அதில் மேல்புறம் உள்ள வடக்குப் பார்த்த கட்டிடம் குடியிருப்பு வீடாகப் பயன்படுத்தப்பட்டு வருவது பற்றியும், அதில் உள்ள சமையல் Gas Stove மற்றும் பொருட்கள் பற்றியும், அதற்கு கீழ்புறம் உள்ள கட்டிடத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிரந்தரமாக பொருத்தப்பட்டு

தற்போதும் இருந்து வருவது பற்றியும், அதற்கான மின்இணைப்பு எண்.387 துண்டிக்கப்பட்டிருப்பது பற்றியும், ஆணையர் போட்டோ மற்றும் வரைபடத்துடன் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்:**

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல, அசல் வழக்கானது இளவர் 1, 2 வாதிகளை முன்னிறுத்தி அவர்களது தந்தை வழி பாட்டியான ஈஸ்வரி என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கானது வழக்குச்சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதியால் தனக்கும், 1ம் பிரதிவாதியான தனது தாயாருக்கும் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரங்கள் இல்லாநிலையதும், செல்லா நிலையதும் என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 2/3 பங்கு பாகப்பிரிவினை கோரி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளதில், மேற்படி வழக்கில் 1, 2 பிரதிவாதிகளான தங்கள் தரப்பு சாட்சியான தன்னை வாதிகள் தரப்பில் பகுதியளவு குறுக்குவிசாரணை செய்யப்பட்டு, அதன் தொடர் குறுக்குவிசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், அசல்வழக்கானது வாதியால் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் எவ்வாறு சித்தித்துள்ளது என்ற விபரமே இவ்வழக்கின் முக்கியமான கருப்பொருளாகும் என்றும், பாகப்பிரிவினை வழக்கிற்கும், இந்த ஆணையர் நியமனம் கோரும் மனுவிற்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், வழக்குச்சொத்தில் அமைந்துள்ளவை குறித்து வாதி தனது வழக்குரையிலும், 3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலும் எவ்வித விபரமும் குறிப்பிடவில்லை என்றும், தற்போது 3ம் பிரதிவாதியும், வாதியும் வாதிக்கு எதிராக உள்ள அம்சங்களை நிறைவு செய்ய புதிதாக ஆவணங்களையும், இம்மனுவையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்றும், வாதி தரப்பில் தன்னை

குறுக்கு விசாரணை செய்யும் பொழுது வழக்குச்சொத்தில் இருப்பவை குறித்து கேள்வி கேட்டதற்கு வாதி தரப்பு வழக்கை 3ம் பிரதிவாதி நிரூபிக்க 3ம் பிரதிவாதி தரப்பில் ஆணையர் நியமனம் கோரி மனுத்தாக்கல் செய்ததிலிருந்தே வாதியும், 3ம் பிரதிவாதியும் கூட்டாக இருந்து கொண்டு இந்த தாவாவினை நடத்தி வருகிறார்கள் என்ற விபரமும், தனக்கும், தனது தாயாருககும் 3ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்களை ஏமாற்றும் நோக்கிலே இருந்து வருகின்றனர் என்ற விபரம் வெளிப்படையாக தெரியவருகிறது என்றும், தாவாவில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரத்திற்கும், இந்த ஆணையர் நியமன மனுவில் கோரும் பரிகாரத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், ஒரு சொத்தின் சுவாதீனம் குறித்து எவ்வாறு நிரூபிக்கப்படவேண்டும் என்பதை மாண்பமை உச்ச மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளபடியால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், வழக்குச்சொத்து யாருடைய சுவாதீனத்தில் உள்ளது, வழக்குச்சொத்தில் என்ன உள்ளது என்பது குறித்து வாதிகள்தான் தக்க ஆவணங்களின் நிரூபிக்க வேண்டும், மனுதாரர் இந்த தாவாவில் ஆவணங்களை சேகரிப்பதற்காகவே மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தனது தரப்பு வழக்கை ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் மூலமாகத்தான் நிரூபிக்க வேண்டுமே தவிர நீதிமன்ற ஆணையர் மூலமாக சொத்தில் என்ன உள்ளது, யார் அனுபவத்தில் உள்ளது என்பது குறித்த சான்றுகளை திரட்ட நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோர முடியாது என்றும், மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை சேகரிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று தெரிவித்து எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. பிரச்சனைக்குரிய தீர்வு :-**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் தாவாவை மனுதாரரின் தாயாரும், இளவர். வாதிகளின் அடுத்த சிநேகிதியுமான ஈஸ்வரி மூலம் தாவா சொத்துக்களில் 2/3 பங்கை பாகப்பிரிவினை செய்து கொடுக்கவும், மனு 1 முதல் 5 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து மனுதாரரால் 3-ம் எதிர்மனுதார் / 1-ம் பிரதிவாதிக்கு 14.03.2014-ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமும், 4-ம் எதிர்மனுதார், 2-ம் பிரதிவாதிக்கு 6 முதல் 12 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து 30.04.2014-ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணமும் இல்லாநிலையது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 4-ம் எதிர்மனுதார் / 2-ம் பிரதிவாதி, மனுதாரரிடமிருந்து 30.04.2014-ம் தேதி பெற்ற கிரய ஆவணச் சொத்து விபரத்தில் 2-லக்கச் சொத்தான சர்வே எண். 130/2A5-ல் கிழமேல் இருபுறமும் 31 அடி, தென்வடல் இருபுறமும் 32 அடி ஆக 992 சதுரடி அளவில் வடக்குப் பார்த்து கட்டப்பட்டுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த ஒரு விவசாய உபயோக சாளையையும், அதில் மின் இணைப்பு எண். 363-ம் இருப்பதாகவும், அதற்கு கீழ்புறம் அதே சர்வே எண்ணில் மனுதாரரால் 2013 ஆம் ஆண்டு கிழமேல் 67, தென்வடல் 30 அளவில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலைய ஆஸ்பெஸ்டாஸ் கூரை கட்டிடத்தையும், அதில் அமைக்கப்பட்டுள்ள ரூ.50,00,000/- மதிப்பிலான இயந்திரங்களையும், அந்த இயந்திரங்களை இயக்குவதற்காக தன்னால் பெறப்பட்ட மின் இணைப்பு எண்.387-யும், அவருடைய கிரைய ஆவணச் சொத்து விபரத்திலோ, 3-ம் எதிர்மனுதார் கிரைய ஆவண சொத்து விபரத்திலோ குறிப்பிடவில்லை, மேலும் 4-ம் எதிர்மனுதார் /2-ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தில் 2-லக்கச் சொத்தாக விவசாய உபயோக சாளை என்று குறிப்பிட்டிருப்பது உண்மையில் மனுதாரர்தரப்பு குடியிருப்பு வீடாகும் என்றும், மேற்படி வீட்டில் தனது தாயாரும், தானும், தனது குடும்பத்தாரும் நாளது வரை குடியிருந்து வருகிறோம் என்றும், மின் இணைப்பு எண். 363 தனது சகோதரி கணவரான R. ராஜா என்பவர் பெயரில் உள்ளது என்றும், குடியிருப்பு கட்டிடத்திற்கு கீழ்புறம் உள்ள வடக்குப் பார்த்த ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த குடிநீர் சுத்திகரிப்பு

ஆலையும், அதில் நிர்மானிக்கப்பட்ட இயந்திரங்களும் தற்போது வரை உள்ளன என்றும், பழனி சார் ஆட்சியர் 22.05.2018–ம் தேதி மின்இணைப்பை துண்டிக்க வேண்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி வரை மனுதாரர் மின்கட்டணத்தை செலுத்தி வந்ததாகவும், 4 ஆம் எதிர்மனுதாரரை 17.11.2023 ஆம் தேதி குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது தாவா சொத்தில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை கட்டிடமோ, அதில் எவ்வித இயந்திரங்கள் பொறுத்தப்படவும் இல்லை என்றும், கிரையத்தேதியிலேயே கிரையதாரர் இயந்திரங்களை எடுத்து சென்றுவிட்டார் என்று பொய் உரைத்ததால், தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

**7.** 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது இளவர் 1, 2 வாதிகளை முன்னிறுத்தி அவர்களது தந்தை வழி பாட்டியான ஈஸ்வரி என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தை பொறுத்து 3 ம் பிரதிவாதியால் 4 ஆம் எதிர்மனுதாரருக்கும், 1 ம் பிரதிவாதியான தனது தாயாருக்கும் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரங்கள் இல்லாநிலையதும், செல்லா நிலையதும் என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 2/3 பங்கு பாகப்பிரிவினை கோரி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளதில், மேற்படி வழக்கில் 1, 2 பிரதிவாதிகளான தங்கள் தரப்பு சாட்சியான தன்னை வாதிகள் தரப்பில் பகுதியளவு குறுக்குவிசாரணை செய்யப்பட்டு, அதன் தொடர் குறுக்குவிசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், அசல்வழக்கானது வாதியால் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகளுக்கு பாகம் எவ்வாறு சித்தித்துள்ளது என்ற விபரமே இவ்வழக்கின் முக்கியமான கருப்பொருளாகும் என்றும், பாகப்பிரிவினை வழக்கிற்கும், இந்த ஆணையர் நியமனம் கோரும் மனுவிற்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், வழக்குச்சொத்தில் அமைந்துள்ளவை குறித்து வாதி அவரது வழக்குரையிலும், 3 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலும் எவ்வித விபரமும் குறிப்பிடவில்லை என்றும், தற்போது இவ்வழக்கில் வாதிக்கு எதிராக உள்ள அம்சங்களை நிறைவு செய்ய 3 ஆம்

பிரதிவாதியும், வாதியும் புதிதாக ஆவணங்களையும், இம்மனுவையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்றும், வாதி தரப்பில் தன்னை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது வழக்குச்சொத்தில் இருப்பவை குறித்து கேள்வி கேட்டதற்கு வாதி தரப்பு வழக்கை 3ம் பிரதிவாதி நிரூபிக்க 3ம் பிரதிவாதி தரப்பில் ஆணையர் நியமனம் கோரி மனுத்தாக்கல் செய்ததிலிருந்தே வாதியும், 3ம் பிரதிவாதியும் கூட்டாக இருந்து கொண்டு இந்த தாவாவினை நடத்தி வருகிறார்கள் என்ற விபரமும், தனக்கும், தனது தாயாருக்கும் 3ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்களை ஏமாற்றும் நோக்கிலே இருந்து வருகின்றனர் என்ற விபரம் வெளிப்படையாக தெரியவருகிறது என்றும், இவ்வழக்கின் பிரதான பொருண்மையான பாகப்பிரிவினை பரிகாரத்திற்கும், இந்த ஆணையர் நியமன மனுவில் கோரும் பரிகாரத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், தாவா சொத்து யாருடைய சுவாதீனத்தில் உள்ளது, தாவா சொத்தில் என்ன உள்ளது என்பது குறித்து வாதிகள்தான் தக்க ஆவணங்களின் வாயிலாக மாண்பமை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும், அதற்கு மாறாக ஆவணங்களை சேகரிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்புடையதல்ல என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று தெரிவித்து எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** இந்நிலையில் இந்த வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில் அசல்வழக்கு வாதிகளின் தாயார், இளவர் வாதிகளின் அடுத்த சிநேகிதியாக இருந்து தாவா சொத்துக்களில் உள்ள 2/3 பங்கை பாகப்பிரிவினை கோரியும், தாவா 1 முதல் 5 இலக்க சொத்துக்களை பொறுத்து மனுதாரர், 3ஆம் எதிர்மனுதாரருக்கு 14.03.2014ஆம் தேதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தை செல்லாதது, இல்லாநிலையது என்று அறிவிக்க கோரியும், 4ஆம் எதிர்மனுதாரர், 2ஆம் பிரதிவாதிக்கு 6 முதல் 12 இலக்க சொத்துக்களை 30.04.2014ஆம் தேதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமும் இல்லாநிலையது மற்றும் செல்லாதது என விளம்புகை பரிகாரம் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வாதிகளின் காப்பாளரான அவர்களது தாயார் வா.சா.1 ஆகவும், பேங்க் ஆப் இந்தியா

வங்கியின் கிளை மேலாளர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, 3, 4 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/3 ஆம் பிரதிவாதி தரப்பில் 30.04.2014 ஆம் தேதி பெற்ற கிரைய ஆவணத்தின் சொத்து விபரத்தில் 2 ஆம் இலக்க சொத்தான சர்வே எண்.130/2A5–இல் கிழமேல் இருபுறமும் 31 அடி, தென்வடல் இருபுறமும் 32 அடி ஆக 992 சதுரடியில் வடக்கு பார்த்து கட்டப்பட்டுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்ட ஒரு விவசாய உபயோக சாளையும், அதில் மின்இணைப்பு எண்.363 என்றும், மேற்படி ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த சாளைக்கு கிழபுறம் கிழமேல் இருபுறமும் 67 அடி, தென்வடல் இருபுறமும் 30 அடி உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலைய ஆஸ்பெஸ்டாஸ் கூரை கட்டிடத்தினையும், அதில் அமைக்கப்பட்டுள்ள ரூ.50,00,000/– மதிப்பிலான இயந்திரங்களையும் அந்த இயந்திரங்களை இயக்குவதற்கான மின்இணைப்பு எண்.387–யையும் நிலஅளவையர், கிராமநிர்வாக அலுவலர் மற்றும் போட்டோகிராபர் ஆகியோர் உதவியுடன் மனுச்சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமித்து உத்தரவிட வேண்டி மனுத்தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், மனுச்சொத்துக்களில் இரண்டு ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த கட்டிங்கள் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதையும், அதில் ரூ.50,00,000/– மதிப்பிலான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதையும், அதற்கான மின்இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்திற்கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்திற்கொண்டும், நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்யப்படும் அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படத்தின் உதவியுடன் அசல் வழக்கில் சரியான தீர்விற்கு வர இயலும் என்பதை காரணத்தை கருத்திற்கொண்டும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று

இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வாறு மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**9.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் திருமதி.சி.பாக்கியலெட்சுமி அவர்கள் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையருக்கு கட்டணமாக ரூ.**7,500/–**யை மனுதாரர் தரப்பில் செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பி, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மனுச்சொத்துக்களை நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் போட்டோகிராபர் உதவியுடன் மனுச்சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படங்களை தாக்கல் செய்ய வாய்தா நாள் 27.02.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2024–ஆம் வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.01.29 17:26:32 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**<u>10. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் –இல்லை</u>**

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.01.29 17:26:37 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

I.A.No.845/2023 in
O.S.No.751/2022
Sub Court, Oddanchatram.
29.01.2024
Order (Fair/Draft)